# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 08 புதன்கிழமை (21-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 144


# இயக்கச்சிப் பகுதியில் நேற்று ராணுவம் முன்னேற முயற்சி

## புலிகள் தாக்கி திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

இயக்கச்சிப் பகுதியில் நேற்றுக் காலை ஸ்ரீலங்காப் படையினர் முன்னேறுவதற்கு மேற்கொண்ட முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

நேற்றுக் காலை 6.20 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் உள்ள பண்ணை காவலரணில் இருந்து ஸ்ரீலங்காப் படையினர் வெளியேறி தடைகளை அகற்றுவதற்காக சுமார் 300 யார் தூரம் வரை முன்னேறினர்.

அவர்கள் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஸ்ரீலங்காப் படையினர் காயங்களுடன் முகாமுக்குத் தப்பி ஓடினர்

இதேவேளை—

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலின்போது விடுதலைப்புலிகள் போராளிகளான கப்டன் கான் அல்லது வாகீசன் (குலராஜசிங்கம் குலசேகரன் - மீசாலை தெற்கு, சாவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் துப்பாக்கிச் சூடு

பூநகரி—கல்முனை பகுதி இராணுவ முகாமிலிருந்து படையினர் நேற்று இரண்டாவது நாளாக குடாக் கடலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தின் போது வள்ளங்களையும், வலைகளையும் கைவிட்டு மீனவர்கள் பலர் தப்பி வந்னர் என்று தெரிவிக்கப்படுகிறது

## சாவகச்சேரி சந்தையருகே குழியில் எலும்புக்கூடுகள்!

யாழ்ப்பாணம், ஏப். 21

சாவகச்சேரி சந்தைக்கு முன்பாக டிறிபேர்க் கல்லூரிக்கு அருகில் கம்பம் நடுவதற்காக நேற்றுக்காலை குழி தோண்டிய சமயம் நிலத்துக்குள் புதையுண்டு கிடந்த பல எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குழியில் எலும்புக் கூடுகள் இருக்கும் தடயம் கிடைத்ததையடுத்து காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து அப் பகுதியில் குழியை அகலமாக தோண்டிப் பார்த்தபோது பல எலும்புக் கூடுகள் காணப்பட்டன.

ஒரு எலும்புக்கூட்டின் கழுத்தில் தாலிக்கொடி காணப்பட்டதாகவும் —

குழிக்குள் பல சேலைகள் சாரங்கள் பழுதடைந்த நிலையில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி சந்தைப் பகுதியில் வைத்து இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட பலரின் எலும்புக் கூடுகளே நேற்று மீட்கப்பட்டவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது (உ-3-117)

## மின்சாரசபை ஊழியர் பலருக்கு இடமாற்றம்.

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகங்களில் கடமையாற்றி வந்த பொறியியலாளர்கள், உதவியாளர்கள், மின் அத்தியட்சகர்கள், எழுதுவினைஞர்கள் உட்பட பலருக்கு வெளிமாவட்டங்களுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களுக்கே இவர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இது சம்பந்தான அறிவுறுத்தல் இலங்கை மின்சாரசபையின் வடமாகாண அலுவலகத்திற்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் அறிய வந்தது.

இடமாற்றம் வழங்கப்பட்ட ஊழியர்கள் வடக்கிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலை மற்றும் இடங்களுக்குச் செல்வதற்கான அனுமதியையும் இலங்கை மின்சாரசபை கூட்டுப்படைத் தலைமையகத்திடம் பெற்றுக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-17 162)

## பாதயாத்திரை செல்ல முயன்ற பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிசார் தாக்கு; 6 பேர் காயம்

கொழும்பு, ஏப். 21

பாதயாத்திரை செய்ய முயன்ற பல்கலைக்கழக மாணவர்களைப் பொலிசார் தாக்கியதில் மாணவர்கள் பலர் காயமடைந்தனர். ஆறு மாணவர்கள் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுதேச வைத்தியப் பிரிவு மாணவர்கள் உட்பட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் ஆயிரம்பேர் நேற்று கரலை அளுத்கம விகாரையிலிருந்து பாத யாத்திரை ஒன்றை மேற்கொள்ள இருந்தனர். இம்மாணவர்களில் பௌத்த பிக்குகளும் அடங்குவர்

பாதயாத்திரை ஆரம்பமாக இருந்த இடத்திற்குப் பத்து மைல் தொலைவிற்கு முன்னால் நிலைகொண்ட பொலீசார் வாகனங்களை மறித்தும், பாதசாரிகளைத் தடுத்தும் அவ்விடத்திற்கு எவரும் செல்லவிடாது தடுத்தனர்.

அவ்வழியால் வந்த மாணவர்களையும் தடுத்து, அவர்கள் வைத்திருந்த சுவரொட்டிகளையும் கைப்பற்றினர். பின்னர் அவர்களைக் களுத்துறை பொலீஸ் நிலையம் செல்லப் பணித்தனர்.

பொலிஸ் நிலையத்தில் மாணவர்கள் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பாத யாத்திரை நடத்த அனுமதி கேட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தொலைத் தொடர்பு அலுவலகத்துக்கு மூடுவிழா?

யாழ்ப்பாணம், ஏப். 21

தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தை மூடுவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் திணைக்களத்தில் கடமையாற்றும் பெரும்பான்மையானவர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டதாகவும்—

ஏனையோருக்கும் இடமாற்ற உத்தரவுக்கடிதங்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டிருப்பதாகவும் —

தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் யாழ் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி, யாழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் செயல்படும் உள்ளக தொலைபேசி இணைப்புக்களை பராமரிப்பதற்காக மட்டும் எட்டுப்பேர் இங்கு பணிபுரிய அனுமதிக்கப்படுவர் என்றும்—

ஏனைய சகலதர ஊழியர்களும் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர் என்றும்— அந்த அதிகாரி

( 6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தில் அமைதி ஏற்படுவது இந்தியாவுக்கு விருப்பமில்லை

### பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் பேட்டி

சென்னை, ஏப். 21

"ஈழத்தில் அமைதி நிலை தோன்றுவது இந்திய அரசுக்கு விருப்பம் இல்லை."

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் "ஜூனியர் விகடன்" இதழுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

கேள்வி: தளபதி கிட்டுவின் மரணம் குறித்து தங்கள் கருத்து என்ன?

பதில்: கடைந்தெடுத்த கோழைத்தனமான — வெட்கக்கேடான ஒரு செயலைச் செய்திருக்கிறது இந்திய அரசு. கிட்டுவின் மரணம் ஒரு நம்பிக்கை துரோகச் செயல்!

சமாதானப் பேச்சில் கலந்து கொள்வதற்காக கிட்டு இலங்கைக்கு பயணமானதில் இருந்து, முழுவிஷயமும் இந்திய அரசுக்குத் தெரியும் "அவரது பாதுகாப்புக்கு எந்தவித பங்கமும் வந்துவிடாது" என்று கூறிக் கொண்டே, மிகக்கேவலமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டது இந்திய அரசு!

ஈழத்தில் அமைதி ஏற்படக் கூடாது என்பதையே இந்திய அரசு விரும்புகிறது. இத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல்களை கண்காணிக்க 500 சுயேச்சைப் பிரதிநிதிகள்

கொழும்பு, ஏப். 21

மாகாணசபைத் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறுவதைத் கண்காணிக்க அரசசார்பற்ற சுயேச்சை அமைப்புகளின் பிரதிநிதிகள் ஐந்நூறு பேர் வரை நியமிக்கப்படுவர்.

எதிர்க்கட்சியினர் இது தொடர்பாக விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக் கண்காணிப்பாளர்களை நியமிக்கும் திட்டத்தை அங்கீகரித்தார்.

இதற்கிடையில் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தனர்.

தேர்தலில் போட்டியிடும் [illegible] மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் குறித்து அவர்கள் முறைப்பாடு செய்தனர். (உ-6)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்றே கருவித் தொகுதி

### 3 கோடி 30 லட்சம் ரூபாவுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஜேர்மன் அரசின் உதவியுடன் நவீன எக்ஸ்றே கருவி தொகுதி ஒன்று கிடைக்கவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுப் பணிக்காக ஜேர்மன் அரசு வழங்கியுள்ள 11 கோடி 30 லட்சம் ரூபா நன்கொடை உதவியில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு எக்ஸ்றே கருவி தொகுதிகள் கொள்வனவு செய்ய 3 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்க ஜேர்மன் அரசு இணக்கம் தெரிவித்திருந்தது.

இந்த நிதிக்கான காசோலை கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகத்தால் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

கொழும்பில் இந்தக் கருவி கொள்வனவு செய்வது தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஆஸ்பத்திரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 90 பேர் சேர்ந்து தற்கொலை

### அமெரிக்காவில் சம்பவம்

டெக்ஸாஸ், ஏப் 21

இயேசுபிரானின் அவதாரங்கள் என்று தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள் தாம் தங்கியிருந்த கட்டடத்துக்குத் தீ வைத்து தற்கொலை செய்து கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அமெரிக்காவில் டெக்ஸாஸ் நகரில் இடம்பெற்றது. மொத்தம் 97 பேர் அக்கட்டடத்துக்குள் இருந்தனர்.

அவர்களில் ஏழு பேர் வரை தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்டனர் 90 பேர் வரை இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சமயத் தலைவர் டேவிட் கொஸ்றிஜ் தலைமையில் இந்த மாபெரும் தற்கொலை நிகழ்வு இடம்பெற்றது

இந்த மத பிரிவினர் தங்கி இருந்த கட்டடம் தீ பிடித்து எரிய ஆரம்பித்தபோது அதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இணுவையம்பதியில்

## திருமுறைப் பெருவிழா

காலம்: 1993 ஏப்ரல் 21. 22. 23. பிற்பகல் 4 மணி
இடம்: இணுவில் கந்தசுவாமி கோவில்

### இன்றைய நிகழ்ச்சிகள்

மங்கள இசை

நாதஸ்வரம்: K R. சுந்தரமூர்த்தி
K. செல்வரத்தினம்
R. கேதீஸ்வரன்
தவில்: K. R. புண்ணியமூர்த்தி
K நித்தியானந்தன்
T. உதயசங்கர்
S. இராமதாஸ்
N கணேசு
பண்ணிசை: இராமநாதன் கல்லூரி மாணவிகள்
தலைமையுரை: கலாநிதி சபா. ஜெயராசா
வரவேற்புரை: பொ. ஐங்கரன்
ஆசியுரை: மகாராஜஸ்ரீ
சு. து. சண்முகநாதக் குருக்கள்
சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக் குருக்கள்
தொடக்கவுரை கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
கருத்தரங்கு: திருமுறைகளில் வாழ்வியல் சிந்தனைகள்
தலைவர்: திரு. க. சிவராமலிங்கம் B.A,
கருத்துரை வழங்குவோர்:
திரு K. சோமசுந்தரம் B. A.
திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M. A.
சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை
திரு. இ ஜெயராஜ்
திரு சிவ. மகாலிங்கம் B. A.

பண்ணிசை அரங்கு
பாட்டு; திரு S. தில்லைமணி
வயலின் திரு S கோபிதாஸ்
மிருதங்கம்: செல்வன் க. கஜன்
பாட்டு: சங்கீத பூஷணம்
திரு. சி. கணபதிப்பிள்ளை
வயலின்: திரு. உ. இராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: திரு. K. கண்ணதாசன்
நாடகம்: திருமுறை காத்த நம்பி

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சிவகாமி அம்மன் கோவில்**
இணுவில்

[25325]



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**

(காலை 8-00 மணி முதல்
மாலை 2-00 மணி வரை)

இதோ
மீண்டும் ஓர் புதிய பிரிவு - V

**ஆரம்பம்: 22 - 04 - 1993**

★ வாரத்தில் நான்கு நாட்கள் நடைபெறும்.

(சி 4937)



THE TRUTH SHALL MAKE YOU FREE
AD 1824
UDUVIL

## உடுவில் மகளிர் கல்லூரி

(தொடர் கல்வி நிறுவனம்)
பட்டப்படிப்புகள் பிரிவு

**G. A. Q. – 94**
யாழ் பல்கலைக்கழகம்

**ஆரம்பம: 24 04 93 பி. ப. 3 மணி**

விரிவுரையாளர்கள்
திரு. S. வரதராஜன் B. A. (Hons)
திரு N. குழந்தைவேலு B. A. (Hons)
திருமதி பவசிங்கம் B. A. (Hons)
திரு K. செல்வரட்ணம் B. A. (Hons)
திரு. S. S. மனோகரன B. Com
திரு. V, துரைராஜா B. A, (Hons)
செல்வி அனுஷா B. A.

(சி/5018) — நிர்வாகி


## ஆலயங்களில்

தாவடி ஸ்ரீ வட பத்திர காளி அம்மன் மஹோற்சவம் இன்று காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா மே மாதம் 4ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 5ஆம் திகதியும் இடம்பெறும்.

இன்று முதல் 15 தினங்கள் இரவு 7-30 மணிமுதல் 8-30 வரை காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் நிகழ்த்தும் கம்பராமாயணத் தொடர் விரிவுரை இடம்பெறும். [க]

o o o

மட்டுவில் கல்வம் சிவன் கோவிலில் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்தி வரும் தொடர் பிரார்த்தனையின் மூன்றாம் மண்டல இறுதி நாளான இன்று, அதிகாலை முதல் பஜனை, பிரார்த்தனை ஆகியவை இடம்பெற உள்ளன.

o o o

ஆறுகால்மடம் ஸ்ரீ ஞான வைரவர் கோவில் நான்காம் திருவிழாவான இன்று இரவு ஏழு மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம சீஷ்யன் கானக தாவாரித பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் "சிவலிங்க சாட்சி" இசைச் சொற்பொழிவு நிகழும். (இ)

## நாளை

வேலணைக் கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் ஒன்று நாளை வியாழன் காலை 9-30 மணிக்கு ஊர். சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

o o o

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவின் கலைவிழா செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் நாளை வியாழன் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-144)

o o o

மேதின ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழன் முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையில் அங்கம் வகிக்கும் கூட்டுறவுத்துறை சார்ந்த அமைப்புக்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர் (இ-162 5)

o o o

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் "இயேசு — வாழ்க்கை வரலாறு" என்ற தமிழ் திரைப்படம் நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது. (இ-5)

o o o

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நாளை வியாழன் மாலை 4 30 மணிக்கு நடைபெறும். (இ-51)


## கணக்கியல்

பிரத்தியேக வகுப்பு
393/47, கோவில் வீதி,
நல்லூர்

**AL/ 95**
ஸ்ரீ B. Com. (Hons)

ஆரம்பம்:
**24 - 04 - 1993**

புதன், வியாழன்
5-30 மணி

குறிப்பு:
முதல் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

(சி-4935)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 21

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தும் வருடாந்த கூடைப்பந்தாட்டப் போட்டித்தொடர் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகும்.

முதலாவது ஆட்டத்தில் ஜொனியன்ஸ் சிவப்பு அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதும்.

o o o

யாழ் நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திருவள்ளுவர் வி க. அணியை எதிர்த்து கொய்யாத் தோட்டம் வி.க. அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா கோயிலுக்கு முன்னால் உள்ள கழக மைதானத்தில் நடைபெறும். [உ]

o o o

யாழ். நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றும் கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி ஒன்றும் இன்று மாலை நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் கண்காட்சி ஆட்டத்தில் சென். நிக்கிலஸ் வி. க. அணியை எதிர்த்து பொற்பதி வி. க. அணி மோதும்.

அடுத்து நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஞானகலா வி. க. அணியை எதிர்த்து பாரதி வி க. அணிமோதும். (உ)

o o o

தாளையடி, ஏப். 21

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தட, கள விளையாட்டுப் போட்டி செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமராட்சி கிழக்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. க. ஈஸ்வரபாதம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம்போல் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு செ. சுவாமிநாதன், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சு. கனகராசா ஆகியோர் கலந்து கொள்வர். (உ-144)

o o o

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் யாழ். கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்ட நிலை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

### கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில்

17 வயதுப் பிரிவு:- மட்டுவில் ம. வி. எதிர் யாழ். கனகரத்தினம் ம. ம வி.

19 வயதுப் பிரிவு:- உரும்பராய் இந்து எதிர் யூனியன் கல்லூரி.

### அத்தியார் இந்துவில்

17 வயதுப் பிரிவு:- சாவகச்சேரி டிறிபேர்க் எதிர் வேலாயுதம் ம. வி.

19 வயதுப் பிரிவு:- சென். பற்றிக்ஸ் எதிர் வயாவிளான் ம. ம. வி. (உ)

## மாவீரர் நினைவஞ்சலி கூட்டம்

தென்மராட்சி, ஏப். 21

ஏப்ரல் மாதத்தில் வீரமரணமடைந்த கொடிகாமம் வட்டப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை வியாழக்கிழமை கெற்பலி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (இ-117)


நாட்டுக்கூத்து அறிஞர்களை

## வரவேற்கிறோம்! ★

வடமோடி, தென்மோடி, காத்தான் கூத்து, வசந்தன்கூத்து (முல்லை மட்டக்களப்பு-மன்னார் பாங்கு) இன்னோரன்ன நாட்டுக்கூத்துகள் பற்றிய அறிவுடைய கலைஞர்களுடன் திருமறைக் கலாமன்றத்தினர் உரையாட விரும்புகின்றனர்.

அத்தகைய அறிஞர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியில் இருந்து 12 மணி வரையிலுள்ள நேரத்தில் மன்றத்திற்கு வருகை தந்து உதவுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5022)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக்

## கிளைத் தலைமையலுவலகம்

எமது கிளையின் உபதலைவர் அமரர் திரு. க. புவனேந்திரன் அவர்கள் உயிர்காப்புச் சேவையிலீடுபட்டிருந்த நேரம் இலங்கை இராணுவத்தினால் காயம் ஏற்பட்டபோது அவரை உடனடியாகப் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற தொண்டர்கள் அனைவருக்கும், அவருடைய புகழுடல் கிளைத் தலைமையகத்திலிருந்து அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது வருகை தந்த அனைவருக்கும், மலர்வளையங்கள், பூமாலைகள், அனுதாபங்கள், அஞ்சலிகள் அளித்த அனைவருக்கும், அவரது இறுதிக்கிரியை ஊர்வலத்தில் பங்குபற்றிய யாவருக்கும் அவர் மரணிக்க நேர்ந்த சூழலைக் கண்டித்து நடைபெற்ற பேரணியில் பங்கு பற்றிய அனைத்துத் தொண்டு நிறுவன ஊழியர்கள், உறுப்பினர்கள், அனுதாபிகள் ஆகியோருக்கும் மேலும் பலவாறான உதவிகள் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க,
யாழ். கிளை.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
20 - 04 - 1993.

(சி/5017)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகர... மன்றம்
யாழ்ப்பாணம்

# தூசு பிடித்துக் கிடக்கும் பாடசாலை உபகரணங்கள்

## உதவி கல்விப்பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம், ஏப் 21

''தென்மராட்சியின் பல பாடசாலைகளில் தொழில் முன்னிலைப் பாடங்களுக்கென கல்வி அமைச்சால் அனுப்பப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் தூசு பிடித்துக் கிடக்கின்றன. பாடசாலை அதிபர்களும் கல்விப் பணிப்பாளரும் இவற்றைப் பயன்படுத்தும் வழிகளைக் காணவேண்டும்.''

நாவற்குழி அறவழிப் போராட்டக் குழு அண்மையில் நடத்திய இடம்பெயர்ந்தோர் சுயசார்புப் பயிற்சித் தொழிலகத்தின் ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. கணேசன் இவ்வாறு கூறினார்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு வீ ஜீ தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''இன்று சுய தொழில் வேலைவாய்ப்புக்கான பல்வேறு வழிகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. இந்த நிலைமையில் உபகரணங்கள் பாவிக்கப் படாமல் இருப்பது வேதனைக் குரியது'' என்று கூறினார்.

தென்மராட்சி வட்டாரப் பொறுப்பாளர் திரு தமிழன் (சங்கர்), தென்மராட்சி உதவி அரச அதிபர் பிரிவுச் செயலர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை, வைத்திய கலாநிதி எஸ். பிலிப் ஆகியோரும் இவ் விழாவில் உரைநிகழ்த்தினார்கள்.

(க-155)

# மண் ஆராய்ச்சி நிலையம் வவுனியாவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 21

மண்பரிசோதனை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை வவுனியாவில் நிறுவ யு. எஸ். எயிட்ஸ் அமைப்பு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடல்நீரால் விவசாய நிலங்கள் உவரடைவதை ஆராய்ச்சி செய்யவும்—

தரிசு நிலங்களில் விவசாய அபிவிருத்தியை மேற்கொள்ளவும்— மண்பரிசோதனை மேற்கொள்ள நிலையம் ஒன்றை அமைக்க உதவுமாறு ஊற்று நிறுவனம், யு எஸ். எயிட்ஸ் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதை அடுத்து 30 லட்சம் ரூபாவை இந்த நிலையம் அமைக்க அந்த நிறுவனம் தர இணங்கியுள்ளதாகவும் – வவுனியாவில் அந்த நிலையத்தை நிறுவ ஏற்பாடு செய்யப்படும் என்றும்— ஊற்று நிறுவன பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

# தளபதியின் மருமகன் எதிரணி சார்பில் போட்டி

விமானப் படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனாவின் மருமகன் திரு. பந்துகா டயஸ் பண்டாரநாயக்கா எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள பொதுமக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிடுகிறார்.

திரு. பந்துகா டயஸ் பண்டாரநாயக்கா பழம்பெரும் அரசியல்வாதி எஸ். டி. பண்டாரநாயக்காவின் மகன் ஆவார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட அண்மையில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தகையோடு அவர் காலிமுகத்திடலில் உள்ள காலபேஸ் ஹோட்டலுக்குச் சென்று தமது திருமண வைபவத்தில் கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விமானப் படைத் தளபதியின் மகள்தான் மணமகள்.

# மாகாணசபைத் தேர்தல் அமைதியாக நடக்குமாம்

மாகாணசபைத் தேர்தலின் போது நாட்டில் அமைதி நிலவும் என புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1991 இல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது நிலவிய சூழ் நிலையிலும் பார்க்க எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்கள் அமைதியாக நடைபெறும் என்றும் அந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ-எ)

## ஐ. தே. கவின் பிரசாரக் கூட்டம் கண்டியில்

மாகாணசபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் இம் மாதம் 26 ஆம் திகதி கண்டியில் நடக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## திருமுறை விழா; இரண்டாம் நாள்

இணுவில்கந்தசுவாமிகோவில் வடக்கு வீதியில் நடைபெறும் திருமுறைப் பெருவிழாவின் இன்றைய இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமை வகிப்பார்.

மாலை 4 மணிக்கு மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திருமுறைகளில் வாழ்வியல் சிந்தனைகள் என்ற கருத்தரங்கும், 'திருமுறை காத்த நம்பி' என்ற நாடகமும் வேறு பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## அங்குரார்ப்பணம்

நல்லூரில் கடந்த வாரம் 'மத்திய மறுமலர்ச்சிக் கழகம்' என்ற பெயரில் புதிய கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் இடம் பெற்ற இந்த நிகழ்ச்சியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. சு சிவபாலன் ஆகியோர் பங்குபற்றினர்.

(ஒ-111)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



★

செல்வி
**சௌமியா தர்மலிங்கம்**

★

நுணாவில் சந்தியைச் சேர்ந்த திரு. திருமதி தர்மலிங்கம் - கலா தம்பதிகளின் செல்வப் புதல்வி சௌமியா தனது முதலாவது பிறந்தநாளை 15-04-1993 அன்று கனடாவில் கொண்டாடினார்.

இவரை கனடாவில் இருக்கும் பப்பா, மம்மா, ராசுசித்தப்பா குடும்பத்தினர், இந்திசித்தப்பா, பபா சித்தப்பா, வதணண்ணா, டென்மார்க் பெரியப்பா குடும்பத்தினர், ஜேர்மனி ஆசையப்பா (வரதலிங்கம்) குடும்பத்தினர், நுணாவிலைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா (சுந்தரலிங்கம்) குடும்பத்தினர், பெரியமாமா, பெரியத்தை குடும்பத்தினர், ஆசை மாமா, ஆசையத்தை குடும்பத்தினர், சின்னமாமா, சின்னத்தை குடும்பத்தினர் (செல்வம் கூல்பார்), கந்தரோடையைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மாமார், சித்திமார், ரஞ்சன்மாமா, ஜேர்மனி சுகந்தன் மாமா, மற்றும் உற்றார், உறவினர்கள், அம்மன் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பப்பா (முத்துக்குமாரு)

''அன்னகிரி'',
நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (6124)

## வடமாகாண ஓய்வூதியர் சேம நலச் சங்கம்

(வரைவுள்ளது)

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: புனித மரியாள் மகா வித்தியாலயம், 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.


காலம்: 24 - 04 - 1993 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு

அங்கத்தவர்கள் அனைவரையும், அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் ஒய்வூதியம் பெறுவோர் எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

அ. வ. ஸ்ரானிஸ்லாஸ்,
செயலாளர்.

65 A, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (25301)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சி. செல்வநாயகம்**
(F. R. G. S ; P. J. K)
(ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி, மலேசியா)

தோற்றம்: 19 — 12 — 1900
மறைவு: 14 — 05 — 1991

திதி: 21 — 04 — 1993

எங்கள் உள்ளங்களில் நீங்காது உறையும் தங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

151, கோவில் வீதி,
நல்லூர். (25316)

## இன்று!

ராகமாலிகா இசைக்குழு பொழியும்

### இன்னிசை மழை

நேரம்:
முற்பகல் 9-30
பிற்பகல் 2 30

நுழைவுச் சீட்டுகளை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

(25322)

| G. A. Q. | 1st in Com. |
|---|---|

## யாழ். பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:

**24 - 04 - 1993** காலை 9 மணி

S. அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்பபாணம்.

(சி-4933)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இங்கிலிஷ் பிறிமியர் 12 அங். கிறைன்டர் இரண்டு, No: 7 அல்லர் ஒன்று, சோம சிறி ஒன்று, 2 அங் 30 அடி சாப்ற் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. குணேந்திரன், இல. 223, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (25318)

பூச்சி அகற்றப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 'கோகுலம்', கைதடிச் சந்தி, கண்டி வீதி, கைதடி. (25312)

### இலவச திருமண சேவை

24 வயது, அனுசம், செவ்வாய் 1, சுவிஸில் உள்ள மணப்பெண்ணுக்கு சுவிஸில், டென்மார்க்கில் மணமகன் தேவை உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி, (25307)

## 50 ஆயிரம் பேர் போதைக்கு அடிமை!

கொழும்பு ஏப். 21

நாட்டில் ஐம்பதினாயிரம் பேர் வரையில் போதைக்கு அடிமையாக உள்ளதாக மதிப்பீடுகள் மூலம் தெரியவருவதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 16-30 வயதுக்குட்பட்டவர்களே அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போதை பாவனைக்காக இவர்கள் ஒவ்வொருவரும் மாதம் சராசரி 5ஆயிரம் ரூபாவைச் செலவு செய்கின்றனராம்.

(த-எ)

## சந்திப்பு

கொழும்பு, ஏப். 21

லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சாணக அமரதுங்க ஜனாதிபதி பிரேமதாஸாவை, ஸ்ரீகோதாவில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை லிபரல் கட்சி ஆதரிக்கும் என்று டாக்டர் அமரதுங்க அப்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

(த-எ)

## தொழில்நுட்ப கல்லூரி பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப். 21

தொழில் நுட்பக் கல்லூரியின் பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகளை பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆங்கில தேசிய தராதரப் பத்திரப் பரீட்சை எதிர் வரும் 26ஆம் திகதியும், ஆங்கில தேசிய தகுதித் தேர்வுப் பரீட்சை 30 ஆம் திகதியும்,

சுருக்கெழுத்தாளர்களுக்கான எழுத்துப் பரீட்சை (உயர்தரம் / கீழ்தரம் - ஆங்கிலம்/ தமிழ்); தொழிற் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரப் பரீட்சை; உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு [புதிய பாடத்திட்டம்] 2ஆம் வருடப் பரீட்சை; உயர் தேசிய வணிகத் தேர்வு 2ஆம்வருடப் பரீட்சை; தேசிய தொழிற் கற்கைகளிலான தகுதித் தேர்வுப் பரீட்சை ஆகியன மே மாதம் மூன்றாம் திகதியும் நடைபெறும்.

(க)


யாழோசை மேம்பாட்டு நிதிக்காக
பல பாடகர்கள், பாடகிகள் வழங்கும்

## செந்தமிழ்ப் பாட்டு

02-05-1993 யாழ். கைலாசபதி கலையரங்கு
நுழைவாயில் சீட்டுக்களை யாழ். பூபாலசிங்கம்
புத்தகசாலையில் பெறலாம்,

*யாழோசை கலைஞர்களை வாழ்த்துகிறோம்.*

பேபி போட்டோ படப்பிடிப்பாளர்கள்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

(25317)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 | 22 |
| 05 | 03 |
| 1924 | 1993 |

திருமதி
### மனோன்மணி கந்தையா (பரராஜசிங்கம்)


எங்கள் அன்பின் குடும்பவிளக்காய், பாசத்தின் ஒளியாய், இதயத்தின் தெய்வமாய் திகழ்ந்து 22-03-1993 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் மனோன்மணி கந்தையா (பரராஜசிங்கம்) அவர்களின் ஆத்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்;
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(6119)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18 | 21 |
| 06 | 04 |
| 1945 | 1991 |

அமரத்துவம் அடைந்த
திருமதி
### றெஜினா றீற்றா தியாகராசா
(றீற்றம்மா)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலித் திவ்ய பூஜைப் பலி புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று (21-04-1993) புதன்கிழமை காலை 6-30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் பூஜைப்பலியில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

சி. தியாகராசா,
46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(25311)


## LONDON EXAMS

Nov. / Dec. - 1993
WEEK-END CLASSES

| | | FEES |
|---|---|---|
| C. I. M. A. (Stage - I) | | 2. 250/- |
| I. A. B | (Foundation) | 600/- |
| | (Intermediate) | 700/- |
| | (Final) | 800/- |

ஆரம்பம்: 08 — 05 — 1993

★ பிரபல விரிவுரையாளர் குழு
★ கட்டணம் தவணை முறையில்

BASIC, LOTUS 1-2-3
SHORT - HAND & TYPING நடைபெறுகின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd Cross Street, Jaffna.

(சி-5013)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 4ஆம் தவணைப் பணம்


பல்கலைக்கழக 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மருத்துவ, கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான 4ஆம் தவணைப்பண மகாபொல கொடுப்பனவுகளை 20 - 04 - 1993 முதல் வழங்க நிதிக்கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கொடுப்பனவு பற்றிய முழுவிவரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

- பதிவாளர்.

(சி-5014)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராஜதுரை உதயணன்

| மண்ணில்: | விண்ணில்; |
|---|---|
| 17—06—1966 | 21—04—1985 |

நீ மறைந்து எட்டாண்டு முடிந்ததையா
நினை நினைக்கும்போது உள்ளம் குமுறுகையா
அடிமைத் தனத்தின் விலங்கினை உடைத்தெறிய
அசையாத உறுதியுடன் செயற்பட்ட செல்வமே!

உன் ஆத்மா சாந்திக்காக இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

— குடும்பத்தினர்.

திரு. பொ. இராஜதுரை,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

(25303)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

## ஓரளவிலேனும் திருத்துவதற்கு

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தின் உப தலைவர் திரு. புவனேந்திரன் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா விமானப்படையினரால் கொலை செய்யப்பட்டது குறித்து கொழும்பிலிருந்து இங்கு வந்த அதிகாரி, தமது அறிக்கையை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமையகத்துக்குச் சமர்ப்பித்திருக்கிறார்.

அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கங்களின் பிரதிநிதிகள் இவ்விவகாரத்தை நேற்று முன்தினம் ஆராய விருந்தனர். அதன் பின்னர் இது விடயமாகப் பாதுகாப்புப் படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

ஆயுதப் போராட்டம் நடைபெறும் சமயங்களில் மருத்துவ, சமய ஆளுநர்களுக்கு, அவர்கள் சார்ந்துள்ள ஸ்தாபனங்களின் இலச்சினைகளைப் பாவிப்பதற்கு மனித நேயச் சட்டத்தின் ஜெனிவாப் பிரகடனம் வகை செய்கிறது.

மருத்துவ, சமய ஆளுநர்கள் தமது சேவை தேவைப்படும் இடங்களுக்குச் செல்வதற்கு அவர்களை அனுமதிப்பது போரில் ஈடுபட்டுள்ளவர்களின் கடமையுடன் இணைந்துள்ளது.

ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுடைய பாதுகாப்பையும் மதிப்பையும் உத்தரவாதப்படுத்துவதற்கான தேவையிலிருந்து இயற்கையாக எழுந்த பெறுபேறுதான் மருத்துவ ஆளுநர்களுடைய பாதுகாப்பு உரிமை.

இவை ஜெனிவா சர்வதேச மனித நேய விதிகளில் அடங்குகின்றன.

ஆகையால், இடைக்காட்டு இராணுவ நடவடிக்கையின் போது, தமது தொண்டு ஸ்தாபனத்துக்கு உரிய சர்வதேச உரிமையைப் பாவித்து ஆவரங்கால் — அச்சுவேலிப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த — இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து உதவி செய்யும். கடமையில் ஈடுபட்டிருந்த— தொண்டர் புவனேந்திரனைக் கொன்றது நிச்சயமாக ஜெனிவாப் பிரகடனத்தை மீறிய செயலாகும். திட்டமிட்டு நடத்தப்பட்ட, செஞ்சிலுவைத் தொண்டர் எனத் தெரிந்து கொண்டும் நடத்தப்பட்ட, படுகொலையாகும்.

தாங்கள் செய்யும் தவறுகளையும், சட்ட, ஒப்பந்த மீறல்களையும் மறைத்து விடுவதிலும், மறுத்து விடுவதிலும், தாம் தவறிழைக்கவில்லை என்று வாதாடுவதிலும் ஸ்ரீலங்கா அரசினரும், அவர் தம் படை அதிகாரிகளும் கை தேர்ந்தவர்கள்; நல்ல அனுபவம் உடையவர்கள். ஆகையால் இது விடயத்திலும் அவர்கள் தமது திறமையைக் காட்ட முனைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இது விடயமாகப் படை அதிகாரிகளுடன் பேசுவதால் இது போன்ற சம்பவங்களை தடுத்து விட முடியும் என்று நம்புவதற்கில்லை; எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆகையால் வடக்கு-கிழக்கில் நடக்கும் போரில், ஸ்ரீலங்காப் படையினர், சர்வதேச மனித நேயப் பிரகடனத்தை மீறி செஞ்சிலுவை அதிகாரி ஒருவரை, அவர் கடமை புரிந்து கொண்டிருந்த வேளை கொன்றிருக்கிறார்கள் என்பதனை சர்வதேச சமுதாயத்துக்கு ஆணித்தரமாக எடுத்துக் கூற வேண்டும் தனது தொண்டரைப் பறிகொடுத்த, தனக்குரிய பாதுகாப்பை இழந்துபோன செஞ்சிலுவைச்சங்கமே அதனைச் செய்ய வேண்டும். அதனையே ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவே ஓரளவிலேனும் ஸ்ரீலங்காப் படைகளை திருத்துவதற்கு உதவும்.

# மோட்டார் ஊர்தி பதிவு வேலைகள் இன்று ஆரம்பம்

**இன்று 21-04-1993 இல் இருந்து சகல மோட்டார் ஊர்தி பதிவுகளும் ஆரம்பிக்கப்படுகின்றன. முதற் கட்டமாக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஊர்தி உரிமையாளர்களினது பதிவு மேற்கொள்ளப்பட உள்ளது. பதிவு மேற்கொள்ளப்படுவோரை சிறிலங்காப் பதிவுப் புத்தகம் அல்லது இறக்குமதிச் சிட்டையுடன் குடும்பப் பதிவு அட்டையையும் நேரில் எடுத்து வரும்படி மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர். இது குறித்த விவரங்களை இங்கு தருகின்றோம்.**

### பிரிவு 01

#### மோட்டார் ஊர்தி பதிவு செய்தல்

அ) தமிழீழத்தில் எமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசத்தில் எவரேனும் தமிழீழ மோட்டார் பதிவாளர் காரியாலயத்திற் பதிவு செய்யாமல் ஊர்தி ஒன்றினை வைத்திருப்பது அல்லது பாவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆ) மோட்டார் ஊர்தி என்பது மோட்டார் இணைக்கப்பட்ட ஊர்திகளுடன் (ரெயிலரும்) பெட்டியும் உள்ளடங்கும்.

இ) யாருடைய அல்லது எவருடைய பெயரில் ஒரு மோட்டார் ஊர்தி பதிவுக்குட்படுத்தப்படுகின்றதோ அவரே குறித்த காலப்பகுதியில் அவ் ஊர்தியின் உரிமையாளரென இப்பதிவின் மூலம் விதந்துரைக்கப்படுகின்றது.

### பிரிவு 02

#### குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்யாத மோட்டார் ஊர்திகள் பதிவு செய்யப்படமாட்டாது

அ) இந் நடைமுறையில் விதந்துரைக்கப்பட்டவாறு மோட்டார் ஊர்தி என்று அடையாளங் காணக்கூடிய முறையில் அமைப்பு, நிறை, அளவு தேவையான உபகரணங்களைக் கொண்டிராத ஊர்திகள் எதையும் மோட்டார் ஊர்தி என்று பதிவுக்குட்படுத்த முடியாது.

[மோட்டார் ஊர்திப் பதிவாளரால் நியமிக்கப்பட்ட மோட்டார் ஊர்திப் பரிசோதகர் மூலம், ஊர்தி பரிசோதனைக்குட்படுத்தப்படும் ]

ஆ) இரண்டரை மெற்றிக் தொன் எடைக்கு மேற்பட்ட மோட்டார் ஊர்திகள் எதையும் மோட்டார் கார் என்று பதிவு செய்ய முடியாது.

### பிரிவு 03

#### [ஊர்திப் பதிவுக்குத் தேவையானசான்றிதழ்கள்

அ) மோட்டார் ஊர்தி ஒன்றினைப் பதிவு செய்வதற்கு அதற்கென அமைக்கப்பட்ட படிவம் பூர்த்தி செய்யப்பட்டு ஊர்தி உரிமையாளர் கையொப்பமிடப்பட வேண்டும்.

ஆ) விற்பனைக்கெனப் பதிவு செய்யப்பட்ட முகவரிடமிருந்து மோட்டார் ஊர்தி கொள்வனவு செய்ததற்கான பற்றுச் சீட்டு அல்லது அத்தாட்சிப் பத்திரம் அல்லது சிறிலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊர்திக்கான பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இ) மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களோ அல்லது அத்தாட்சிப்படுத்தக் கூடிய ஏனைய ஆவணங்களோ இல்லாதவிடத்து மோ. ஊ. படிவம் 02இல் கேட்கப்பட்ட ஆவணங்களுடன் பூர்த்தி செய்து பதிவுக்குட்படுத்தலாம். மோட்டார் ஊர்திப் படிவம் 02இன் மூலம் பதிவு செய்யப்படும் ஊர்திகளுக்குத் தற்காலிகப் பதிவுப் புத்தகமான சிவப்புப் புத்தகம் வழங்கப்படும்.

ஈ) ஊர்திகளின் விற்பனையையோ, கைமாற்றுதலையோ, சிவப்புப் புத்தகம் எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. ஆயினும் ஊர்தியைப் பொறுப்பேற்பவர் ஊர்திக்குச் சரியான சான்றிதழ்கள் இல்லாத நிலையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே சிவப்புப் புத்தகம் வழங்கப்படுகிறது.

### பிரிவு 04

#### ஆண்டு வரி அனுமதிப்பத்திரம்

அ) தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளர் காரியாலயத்தினால் வரையறுக்கப்பட்ட ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளாத ஊர்திகள் எதையும் (மக்கள் நடமாடும்)தெரு வீதிகளில் பாவிப்பது அல்லது செலுத்திச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என விதந்துரைக்கப்படுகின்றது.

ஆ) பதிவு செய்யப்பட்ட ஊர்தி, உரிமையாளரினால் அடுத்து வரும் ஆண்டில் பாவிக்க முடியாத நிலையில் இருக்குமானால் அது பற்றி ஊர்திப் பதிவாளருக்கு நடப்பு ஆண்டில் டிசம்பர் 31ஆம்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ குறிக்கப்பட்ட படிவத்தின் மூலம் அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பத்திற்குரிய அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணத்தினைச் செலுத்த வேண்டும் என இந்நடை முறை மூலம் விதந்துரைக்கப்படுகின்றது

### பிரிவு 05

#### இயந்திரம் / அடிச்சட்டம் பதிவுக்குட்படுத்தல்/ மோட்டார் ஊர்தியை அழித்தல்

அ) மோட்டார் ஊர்தியின் இயந்திரமோ அல்லது அடிச்சட்டமோ வைத்திருக்கும் எவரேனும் பிரிவு 01 இல் கூறப்பட்டவாறு நடைமுறைகளைப் பேணிப் பதிவுக்குட்படுத்தவேண்டும். பதிவுக்குட்படுத்தாவிடின் தண்டனைக்குரிய குற்றமாகும் என விதந்துரைக்கப்படுகிறது.

ஆ) ஒரு மோட்டார் ஊர்தி அல்லது அடிச்சட்டம் இயந்திரம் போன்றவற்றை அழிப்பதாயின் அல்லது பதிவுகளை நீக்குவதாயின் மோட்டார்ப் பதிவாளர் காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தை உரிமையாளர் பூர்த்தி செய்வதன் மூலம் ஊர்திப் பதிவாளருக்கு அறியத் தர வேண்டும்.

### பிரிவு 06

#### அரச, அரச கூட்டுத்தாபனம் பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகளைப் பதிவுக்குட்படுத்தல்

அ) முற்று முழுதாக அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புகளின் பெயரில் பதிவுக்குட்படுத்தப்பட்ட ஊர்திகளே அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் ஊர்திகள் என்று அழைக்கப்படும்.

ஆ) முற்று முழுதாக அரச, அரச கூட்டுத்தாபன பொது அமைப்புக்களின் தேவைகளுக்கு மட்டும் பாவிக்கப்படும் ஊர்திகளை எக்காரணம் கொண்டும் அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் தலைவர் அல்லது எவரேனும் ஒருவரது பெயரில் பதிவு செய்ய முடியாது. அவ்வாறு பதிவு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகள் அனைத்தும் அந்தந்த அமைப்புக்களின் பெயர்களின் பெயர்களிலேயே பதிவுக்குட்படுத்தப்படும். பொறுப்பு வாய்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லது அதிகாரிகள் இருவர் தமிழீழ மோட்டார் ஊர்தியின் பதிவுப் படிவத்தில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திப் பதிவுக்குட்படுத்த வேண்டும்.

### பிரிவு 07

#### அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் தனிப்பட்டவருக்கு வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திகள்

அ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களில் வேலை செய்பவர்களுக்கு வேலைகளைத் துரிதமாக முடிப்பதற்காக அல்லது பிற காரணங்களுக்காக, ரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் கொள்வனவு செய்து கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட அல்லது நன்கொடையாக கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திகளை நபரொருவரின் பெயரிலோ அல்லது எவரேனும் ஒருவரின் பெயரிலோ பதிவுக்குட்படுத்துவதாயின் உரியதிணைக்களம் அல்லது பொது நிறுவனத் தலைமை அதிகாரி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புகளினால் கடன் அடிப்படையில் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட மோட்டார் ஊர்தியின் கடன் செலுத்தப்படும் வரை பதிவுப் படிவத்தில் முன்னைய உரிமையுடைய அமைப்பின் பெயரே குறிப்பிடப்படவேண்டும்.

### பிரிவு 08

#### நடைமுறைப்படுத்துதல்

அ) ஒரு மோட்டார் ஊர்தி இயந்திரம் அடிச்சட்டம் போன்றன தொலைத்தால் அல்லது களவுபோனால் உடன் தமிழீழக் காவற்துறையினருக்கு அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடின் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆ) மோட்டார் ஊர்திப் பதிவாளரினால் வகுக்கப்பட்ட நடைமுறைச் சட்டதிட்டங்களை மீறுபவர்கள் மீது பதிவாளரினால் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்அதிகாரம் தமிழீழ காவற்துறையினருக்கு அல்லது ஊர்திப் பதிவாளரினால் அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு உண்டென்பதை இந் நடைமுறையால் விதந்துரைக்கப்படுகின்றது.

#### மோட்டார் ஊர்தியின் பதிவுப் படிவங்கள்

1) மோட்டார் ஊர்திக்கான உறுதிச் சான்றிதழ் - இருப்பின் தமிழீழ பதிவுப் படிவம் (மோ ஊ 01)

2) மோட்டார் ஊர்திக்கான உறுதிச் சான்றிதழ் இல்லாவிடின் தமிழீழ பதிவுப்படிவம் (மோ. ஊ. 02)

3) மோட்டார் ஊர்தி உரிமையாளர் மரணம் பற்றிய அறிவித்தற் படிவம் (மோ. ஊ. 03)

4) மோட்டார் ஊர்திப் பதிவுப் புத்தகத்தின் நகலுக்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 04)

5) மோட்டார் ஊர்தி அடிச்சட்டம் அல்லது இயந்திரம் வைத்திருப்பதற்கான தமிழீழ பதிவுப் படிவம். (மோ. ஊ 05)

6) மோட்டார் ஊர்தி வரி விண்ணப்பப் படிவம் (மோ. ஊ. 06)

7) மோட்டார் ஊர்தி வரி அட்டை நகலுக்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 07)

8) மோட்டார் ஊர்தி மாற்றிக் கொடுப்பதற்கான விண்ணப்பப் படிவம் (மோ. ஊ. 08)

9) மோட்டார் ஊர்தி கொள்வனவின் பின் தமிழீழப் பதிவதற்கான விண்ணப்பப் படிவம் (மோ. ஊ. 09)

10) மோட்டார் ஊர்தி பதிவுகளை நீக்குவதற்கான விண்ணப்பப் படிவம் (மோ. ஊ. 10)

11) தமிழீழ மோட்டார் ஊர்தி வருடாந்தவரி பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ 11)

12) தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 12)

13] இயந்திரம் / அடிச்சட்டம் வைத்திருப்பதற்கான தமிழீழ அனுமதிப் பத்திரம் (மோ. ஊ. 13)

14) தமிழீழ மோட்டார் ஊர்திப் பரிசோதகரின் உறுதிச் சான்றிதழ் (மோ. ஊ. 14)

## யாழ். விஞ்ஞான சங்கத்தின் இரண்டாம்ஆண்டுநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா இன்று முதல் 3 நாட்கள் யாழ் பல்கலைக் கழக பௌதிக விரிவுரை மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் விழாவிற்குப் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார். உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா ஆரம்பவுரையை நிகழ்த்துவார்.

தொடர்ந்து பேராசிரியர் துரைராசா தலைமையில் "இன்றைய கல்வி அமைப்பில் மாற்றத்தின் தேவை'' என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறும். பத்து அறிஞர்கள் இதில் கருத்துரை வழங்குவார்கள்.

பிரதானமாக விஞ்ஞான, தொழில்நுட்ப விஷயங்கள் பற்றிய உரைகள் இடம் பெறும். மாலை நிகழ்ச்சிகளில் விவசாயத்தின் இன்றைய நிலைமை பற்றிய விரிவுரையும் இடம்பெறும். இவ் விழாவில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

(க)

## பாஷையூரில் நினைவு விழா

குருநகர், ஏப் 21

பாஷையூர் பெரும்புலவர் மதுரகவி நீ. மிக்கோர்சிங்கம் நினைவு விழா நாளை வியாழக்கிழமை மாலை 4மணிக்கு புனித அந்தோனியார் மகவிர் வித்தியாலயத்தில் திரு. மு. சிங்கராயர் தலைமையில் நடைபெறும்.

அருட்திரு. ஞா. பிலேந்திரன், சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி காரை. சுந்தரம் பிள்ளை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்

பாஷையூர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

(ஓ-51)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 21

கராத்தே கண்காட்சி, மற்றும் கராத்தே போட்டி என்பவற்றை நடத்துவது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்தில் நாளை வியாழன் முற்பகல் 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படவுள்ள அந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் கராத்தே வகுப்புக்களை நடத்திவரும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்னை மரம் வெட்டுவதை தடைசெய்ய அரசு முடிவு!

கொழும்பு, ஏப். 21

தென்னந்தோட்டங்களைத் துண்டாடுவதும், அவசியம் இன்றி தென்னை மரங்களை வெட்டுவதும் சட்ட பூர்வமாக தடை செய்யப்படும்.

அமைச்சரவையின் உப குழு ஒன்று செய்த சிபார்சு மீது அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

தெங்குத் தொழில் வளர்ச்சி குறித்து சிபார்சு செய்யும் பொருட்டு அமைச்சரவை உப குழு பிரதமர் டி.பி. விஜெதுங்கா தலைமையில் நியமிக்கப்பட்டிருந்தது.

ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட தென்னங் காணியைப் பிரித்து விற்பதும் தடை செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது


லெப். கேணல் சந்தோஷம் வீதி

அரியாலை அக்கினி வைரவர் ஆலய புனருத்தாரண நிதிக்காக

**ராஜன்ஸ் குழுவினரின்**

**★ இசை மாலை ★**

காலம்: **24 — 04 — 1993** சனிக்கிழமை

இடம்: ஆலய முன்றல்

விளம்பர அன்பளிப்பு:

மேகாஸ் வீடியோ, மாம்பழம் சந்தி,

ராணி ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, அரியாலை.

யாழ்ப்பாணம்.

(25329)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி இராஜினி இரட்ணம்

(யாழ். பல்கலைக் கழக 2 ஆம் வருட உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவி)

கோண்டாவில் மேற்கு சைவப் பாடசாலை வீதியைச் சேர்ந்த செல்வி இராஜினி, இரட்ணம் (2 ஆம் வருட உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவி) அகால மரணமானார்.

இவர் காலம்சென்ற திரு. அ. இரட்ணம் (முன்னாள் விரிவுரையாளர், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி) - காலம்சென்ற திருமதி சறோஜினிதேவி இரட்ணம் ஆகியோரின் அன்பு மகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21-04-93) புதன்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கு சண்முகலிங்கம்

சைவபாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு-

(25327)

### திருமதி தையல்நாயகி தில்லையம்பலம்

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தையல்நாயகி தில்லையம்பலம் 22-03-93 அன்று காலை கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் (முன்னாள் ஓவசியர் இரத்தினபுரி-யாழ்ப்பாணம்) அருமை மனைவியும், இராசாத்தி, ஆசை, பொன்னர், பாலசுப்பிரமணியம், மணி, யோகநாதன், இலங்கைவேல், சிவயோகபதி, சிவயோகராஜன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவர். ஈமக்கிரியைகள் 6ஆம் இலக்க, அலெக்ஸ்ஸான்ரா ரெறஸ், வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கனத்தையில் 24-03-93 அன்று இடம்பெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. இலங்கைவேல்.

(சி-4932)

### ஏரம்பு தனபாலசிங்கம்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஏரம்பு தனபாலசிங்கம் கொழும்பில் 19-04-93 இல் காலமானார்.

அன்னார் ஏரம்பு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், யுகலட்சுமி, ராயு, திவாகரன், தீபன், திவாஜினி, இனகரன் ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி, சிவம், செல்வராசா, நடேசமூர்த்தி, ராஜேஸ்வரி (யாழ் தபாலகம்) கோணேஸ்வரி, விக்கினேஸ்வரி, கிருஷ்ணசிங்கம், திருவருட்செல்வன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ரி. ராஜேஸ்வரி
(சகோதரி)

30/2, சீனியர் லேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(25329)

## இந்தி நடிகர் தடுத்துவைப்பு

பம்பாயில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட இந்தி நடிகர் சஞ்சேதத் தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சஞ்சேதத் இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகரும் தயாரிப்பாளருமான சுனில்தத்தின் புதல்வர் ஆவார்.

பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் சஞ்சேதத் கைது செய்யப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

### இயக்கச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி), இரண்டாம் லெப்டினன்ட் வீரையன் (கந்தசாமி விஜயதாஸ் - வத்திராயன் வடக்கு, தாளையடி) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

கடந்த சனியன்றும் பிற்பகல் 2 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் உள்ள இராணுவ காவலரணில் வேலை செய்துகொண்டிருந்த இராணுவத்தினருக்கு உதவியாக இராணுவத்தினர் 200 யார் தூரம் முன்னோக்கி வந்தனர்.

முன்நோக்கி வந்த இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து 12. 45 மணியளவில் படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-117)

### 90 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள் இருந்தவர்களை வெளிக்கொணர்வதற்காக அக்கட்டடத்துக்குள் பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். எனினும் பயன் எதுவும் ஏற்படவில்லை. ஏழு பேர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

தற்கொலை செய்து கொண்ட 90 பேரில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர். குழந்தைளில் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் 15 பேர் என்று தெரிவிக்கப்பட்டது.

இயேசுபிரானின் அவதாரங்கள் என்று தம்மைக் கூறிக் கொண்ட இந்த மதபிரிவினரின் கட்டடம் கடந்த பல நாட்களாக பொலீஸாரினால் முற்றுகையிடப் பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

### யாழ். தொலைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தார்.

சகல இடமாற்ற உத்தரவுகளும் உடனடியாக அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், பெரும்பாலும் ஒரு சில மாதங்களுள் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் செயல் இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

### ஈழத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னையே இந்தச் சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது.

கேள்வி: விடுதலைப் புலிகள் குறித்து உங்கள் கட்சியின் நிலை என்ன?

பதில்: பிறரைப் போல் காலத்துக்குத் தகுந்தாற் போல் கொள்கையை மாற்றிக் கொள்பவர்கள் அல்ல நாங்கள்.

எங்கள் ஆதரவு — கொள்கை அப்படியே தான் உள்ளது. (ஒ)

### யாழ். ஆஸ்பத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் தலைமையில் குழு ஒன்று நேற்று கொழும்புக்கு புறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

ஜேர்மனில் தயாரிக்கப்பட்ட எக்ஸ்றே கருவித் தொகுதியே கொள்வனவு செய்யப்படவிருக்கிறது. ஜெனரேட்டர் உட்பட சகல வசதிகளையும் இந்தத் தொகுதி கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தமிழ்நாடு சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று உண்ணாவிரதம்

சென்னை, ஏப். 21

தமிழ்நாடு சட்டசபையில், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நேற்று உண்ணாவிரதம் இருந்தனர்

சட்டசபையில் எம்.ஜி.ஆர் அ.தி.மு.க உறுப்பினர் திருநாவுக்கரசு பேசிக் கொண்டிருந்த போது, அவரை அ.தி.மு.க. உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் ஏசினர். இதனை ஆட்சேபித்தும் சபாநாயகரின் ஜனநாயக விரோத நடவடிக்கையைக் கண்டித்துமே இந்த உண்ணாவிரதம் நேற்று பிற்பகல் 2 0ப் மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

## சைக்கிள் ஓடும் வேளையில் நடந்த மரணங்கள்

தென்மராட்சி, ஏப். 21

தென்மராட்சியில் கடந்த வாரத்தில் மூன்று பொதுமக்கள் சைக்கிள் ஓடிக் கொண்டிருந்த வேளை திடீரென விழுந்து மரணமாகியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் மட்டுவில் தெற்கிலும், சங்கத்தானையிலுமாக இருவர் இவ்வாறு மரணமாகினர்.

வேலணையிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவரான மு சி. ஐயாத்துரை [வயது 70] என்பவர் வறகு ஏற்றிவரும் சமயம் மட்டுவில் தெற்கில் வீழ்ந்து மரணமானார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அ இருச்செல்வம் [வயது 48] என்பவர் சங்கத்தானையில் சைக்கிளில் இருந்து வீழ்ந்து மரணமானார்.

அண்மையில் நாவற்குழியில் சூ அல்பிரட் [வயது 54] என்பவர் சைக்கிளிலிருந்து வீழ்ந்து மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

### பல்கலைக்கழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். ஆனால் அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

உடனே பல்கலைக்கழக மாணவர்கள் காலி-கொழும்பு வீதியில் அமர்ந்து ஆட்சேபம் தெரிவித்தனர். தமது சுவரொட்டிகளைத் திரும்பத் தந்தால் தாம் கொழும்பு செல்வதாகத் தெரிவித்தனர் சுவரொட்டிகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

மாணவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டு கொழும்பு செல்லப்புறப்பட்ட சிறிது நேரத்தில் மற்றொரு பொலிஸ் கோஷ்டி மாணவர்களின் வாகனங்களை இடைவழியில் நிறுத்தி அவர்களைத் தாக்கியது.

பொலீஸார் நடத்திய இத் தாக்குதலில் ஆறு மாணவர்கள் படுகாயமுற்றனர். அவர்களில் நால்வர் பாணந்துறை ஆஸ்பத்திரியிலும், இருவர் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதயாத்திரையைப் பொலீஸார் தடுத் போதிலுப், திட்டமிட்டவாறு சாகும் வரை உண்ணாவிதரப் போராட்டம் நாளை ஆரம்பமாகும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. சுதத் அழகக்கோன் தெரிவித்தார். [அ-6]

## மாற்றம் வரும்

இந்திய மத்திய அமைச்சரவை மீண்டும் மாற்றி அமைக்கப்படவிருக்கிறது.

தற்போதைய வரவு — செலவுத்திட்ட விவாதம் நாடாளுமன்றத்தில் முடிவடைந்ததும் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்று புதுடில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது தெரிந்ததே

## இந்திய ராணுவம் உஷார் நிலையில்!

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து இந்திய இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதிகள் உஷார் நிலையில் இருக்க வேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவ் பணித்துள்ளார்.

## வாழப்பாடிக்கு அச்சுறுத்தலாம்

விடுதலைப் புலிகளினால் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் —

இதன்காரணமாக அவருக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## இன்று

கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நடத்தப்படும் கலை விழா இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

கலை விழாவில் நகைச்சுவைக் கதம்பம், கனத்தில் காத்தான் சிந்துநடைக் கூத்து நிகழ்ச்சி, இன்னிசை நிகழ்ச்சி ஆகியன நடைபெறும்.

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி இராஜினி இரட்ணம்

விஞ்ஞான பீட 2 ஆம் வருட
உயிரியல் பிரிவு மாணவி

பெற்றோரை பிரிந்து நீ
பட்டம் பெற்று
இன்னலுறும் மக்களுக்கு
உதவி செய்யும் உன் முடிவை
இடையினிலே மறந்தனையோ?
நட்புக்கு இலக்கணமாய் நயமுடனே
பழகிவந்த நண்பியே இராஜினி
நட்புக்காய் பல உதவி நல்லபடி
ஆற்றிவந்த இராஜினி
பல்கலையில் பறவையாய் எம்முடனே
பாடித்திரிந்த நீ — இன்று
எம்மை விட்டுப் பிரிந்து பாதை
மாறிச் சென்றதேனோ?

20 - 04 - 93 அன்று எம்மை விட்டுப் பிரிந்த
செல்வி இராஜினி அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலிகள்

விஞ்ஞான பீட, 2ம் வருட
உயிரியல் பிரிவு மாணவர்கள்

(25328)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org